1970 மார்ச் 14]

மாண்புமிகு சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய யோசனை ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் படும்.

Writ petition against Government Order

*384 Q. THIRU N. S. V. CHITHAN: Will the Hon. Minister for Religious Endowment be pleased to state:

(a) whether the attention of the State Government has been drawn to the judgment of the Madras High Court in revising its order on a house owner's writ about the 2nd July, 1969; and

(b) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: (அ) தியாகராயநகரில் உள்ள ஒரு வீட்டை அரசின் பொறுப்பிலிருந்து விடுவிக்க மறுத்து அரசு ஆணை பிறப்பித்தது. அதை எதிர்த்து அந்த வீட்டுச் சொந்தக்காரர் உயர் நீதி மன்றத்தில் ரிட் மனு ஒன்றைத் தாக்கல் செய்தார் ரிட் மனுவை அனுமதித்து உயர் நீதி மன்றம் 30-6-69 அன்று பிறப்பித்த ஆணையைப் பற்றி அரசு அறியும்.

(இ) சென்னை, உயர் நீதி மன்றத்தில் மேற்குறிப்பிட்ட ஆணைகளின் மீது மேல்முறையீடு செய்ய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

குந்தா மின் திட்டத்திலிருந்து வெளியேற்றப்படும் நீர்.

*385 வினா—திரு. ஏ. எம். இராஜா: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

குந்தா மின் திட்டத்தில் பயன்படுத்தப்பட்டு வெளியேற்றப் படும் கழிவு நீர் எவ்வளவு கன அடி?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: பவானி, குந்தா ஆறுகள் அவற்றின் கிளை ஆறுகளான அவலஞ்சி, எமரால்டு மற்றும் நீலகிரியிலுள்ள பல ஓடைகள் ஆகியவற்றின் நீரை குந்தா மின்சக்தி உற்பத்தி நிலையத்தொடரைச் சேர்ந்த ஐந்து மின்சக்தி உற்பத்தி நிலையங்களில் பயன்படுத்திக் கொண்டு இறுதியாகப் பில்லூர் அணையின் கீழுள்ள குந்தா மின் நிலையம் 4 லிருந்து அது வெளிவிடப்படுகிறது. குந்தா மின் நிலையம் 4 லிருந்து வெளிவிடப்படும் நீரின் அளவு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு:—

1968–69-ம் ஆண்டுக் கால அளவில்—

மொத்தம்	..	31,678·28 மில்லியன் கன அடி.
சராசரி வினாடிக்கு	..	1,004 கன அடி.

1969-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் 1969-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் வரையிலுள்ள கால அளவில்:—

மொத்தம்	..	18,438·26 மில்லியன் கன அடி.
சராசரி வினாடிக்கு	..	1,166 கன அடி.